**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

# இந்திய மொழி இதழ்கள் சட்டம் (Media Laws and Ethics) Part - 2

## இந்திய மொழி இதழ்கள் சட்டம்

## (Media Laws and Ethics) Part -2

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)

முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்

Dr. Ragunathan, Assistant Professor




### இந்திய மொழி இதழ்கள் சட்டம் (1878)

ஆங்கிலேய அரசைத் தாக்கி எழுதுவதைத் தடை செய்ய இச்சட்டம் கொண்டு வரப்பட்டது இது 1878இல் லிட்டன் பிரபுவால் இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் படி

- இதழ்கள் குறிப்பிட்ட பிணையத் தொகையைச் செலுத்த வேண்டும்.
- அரசாங்கத்தைக் குறை கூறும் விதமாகவோ
- இனம், மதம், சாதிக் கலவரங்களைத் தூண்டும் வகையிலோ எழுதக்கூடாது.
- மீறினால் பறிமுதல் செய்யும் அதிகாரம் நீதிமன்ற நடுவருக்கு உண்டு.
- மேலும் எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடியாது
- எதிர்ப்பவர்கள் பிணைத் தொகையை இழப்பதோடு சிறைத்தண்டனைக்கும் உள்ளாவர்

**1881 ஆண்டில்**

பின்னர் ஆம் ஆண்டு ரிப்பன்பிரபு காலத்தில் இச்சட்டம் திரும்பப் பெறப்பட்டது.

### குற்றத் தூண்டுதல் தடுப்புச் சட்டம் (1908)

ஆங்கிலேய அரசின் அடக்குமுறைகளைக் குறிக்கும் மற்றுமொரு சட்டம் 1908இல் பிறப்பிக்கப்பட்டது.

இச்சட்டம் கூறுவது

- குற்றங்களைத் தூண்டும் செய்திகளை வெளியிட்டால் இதழையும் அச்சகத்தையும் நீதிபதி பறிமுதல் செய்யலாம்.

### 1910ஆம் ஆண்டு இதழ்கள் சட்டம்

- விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான ஆங்கில அரசின் நடவடிக்கைகளுள் இச்சட்டமும் ஒன்றாகும்.
- இரண்டாயிரம் ரூபாய் வரை பிணையத் தொகையை இதழ்கள் கட்ட வேண்டும்.
- அரசுக்கு எதிரான செய்திகள் வெளியானால், அஞ்சலக அதிகாரி இதழ்களை நிறுத்தி வைக்கலாம்.
- அரசுக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியாது.
- கடுமையான இச்சட்டத்தால் இதழ்கள் பல நின்று போயின.

1921ஆம் ஆண்டு சாப்ரூ என்பவரின் தலைமையில் அமைந்த குழுவின் பரிந்துரையின்படி இச்சட்டம் நீக்கப்பட்டது.

### செய்தித்தாள் அவசரச் சட்டம் 1930

செய்தித்தாள் அவசரச் சட்டம் 1930ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இச்சட்டப்படி

- செய்தித்தாள்களை நிறுத்தி வைக்கும் அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டது. இதனால் பல இதழ்கள் பாதிப்பு அடைந்தன.

### நெருக்கடிக் கால அதிகாரச் சட்டம் 1931

1931ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இச்சட்டம் ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடிக் கால அதிகாரங்களை அளித்தது.

இச்சட்டப்படி

- இதழ்களும் அச்சகங்களும் பத்தாயிரம் ரூபாய் பிணையத் தொகை கட்ட வேண்டும். இத்தொகையை மாநில அரசுகள் பறித்துக் கொள்ளலாம்.
- தேசத் தலைவர்கள் பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாது.
- இச்சட்டம் காந்தியடிகளின் சட்டமறுப்பு இயக்கத்தை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டது.

ஆதாரம் : இது ஊடக பாடத்திட்டத்திக்கு பொருந்தும்.

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)
முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்
Dr. Ragunathan, Assistant Professor

Posted 17th July 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
Labels: STUDY MATERIAL